**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

**O.S. NO**. 355/2022

**வா.சா.** 1

**திருமதி. சாய்பிரியங்கா, த/பெ. ஆனந்தன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு தொடர் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( 2, 3 பிரதிவாதிகள் தரப்பில்)**

எனது திருமண நாள் 09-09-2021. 2007 முதல் 2021 வரையான காலகட்டத்தில் தாவா சொத்திலிருந்து எனக்கு வருமானம் கொடுக்கவேண்டும் என்று என் தாத்தாவிடம் கேட்டேனா என்றால் இல்லை திருமணத்திற்கு பின்னிட்டு தான் சொத்து இருப்பதே எனக்கு தெரியவந்தது. என் தாயாராவது கேட்டாரா என்றால் இல்லை. திருமணத்திற்கு முன்பாக நான் என் தாயாருடன் இருந்தேனா என்றால் இல்லை எனது உறவினர் வீட்டில் தான் இருந்தேன். அவ்வாறு இருந்ததாக கூறும் உறவினரின் பெயர் என்ன என்றால் நடராஜன். மேற்படி நடராஜன் என்பவரது வீட்டில் தான் இருந்தேன், என் தாயாரது வீட்டில் இருக்கவில்லை என்பது குறித்து வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு திருமணம் செய்து வைத்ததாக கூறும் உறவினரும் நடராஜன்தானா என்றால் ஆமாம். மேற்படி நடராஜன் எந்த வகையில் எனக்கு உறவினர் என்றால் என் அம்மாவின் சகோதரரின் மகன். அவர் விவசாயம் செய்து வருகிறார். மேற்படியார் தான் எனது பள்ளி படிப்பு முதல் முதுகலை படிப்பு வரை செலவு செய்ததாக சொல்கிறேன் என்றால் ஆமாம். மேற்படி நடராஜன் என்பவரை வழக்கில் சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் ஆமாம். என் தாயாருக்கும் அவருக்கும் விரோதம் எதுவுமில்லை என்றால் அவருக்கு தான் தெரியும். எனது பள்ளி சான்று, கல்லூரி சான்றுகள், திருமண பத்திரிக்கை ஆகியவற்றை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் அது எனது வழக்கிற்காக

எதிராக அமைந்துவிடும் என்பதால் தான் அதனை தாக்கல் செய்யாமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்த நாளிலிருந்து தற்போது வரையாவது என் தாயாரை நான் சந்தித்தேனா என்றால் இல்லை. தற்போது நான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளது என் தாயாருக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் தாயார் நடமாடும் நிலையில் தான் உள்ளார் என்றால் சரிதான். பழைய வழக்கை பற்றி என் அம்மாவிடம் நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை என்றால் ஆமாம். முதல் அயிட்ட சொத்தானது சென்னியப்பகவுண்டரின் தனிப்பட்ட சொத்தா அல்லது பொது குடும்ப சொத்தா என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். மேற்படி சொத்து 09-09-1959 ல் கிரையம் பெற்ற சொத்து என்று தற்போது தான் எனக்கு தெரிகிறது என்றால் சரிதான். மேற்படி சொத்தை என் தாயார் வழக்கு தாக்க்ல செய்யும்போது சேர்த்தாரா அல்லது சேர்க்கவில்லையா என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். 2 வது அயிட்ட சொத்தானது செல்லாதோட்டம், அந்த சொத்தை என் தாயார் தனக்கு வேண்டாம் என்று கூறி அதற்கு ஆதரவாக பணம் பெற்றுக்கொண்டார் என்ற விபரம் தற்போது தான் எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். 3 ம் அயிட்ட சொத்து அரசமரதுண்டு, சமாதி இருக்கும் தோட்டம். மேற்படி பழைய வழக்கில் 2 ம் அயிட்டமாக சேர்க்கப்பட்டுள்ளது என்பதே தற்போது தான் எனக்கு தெரியவருகிறது என்றால் வழக்கு தாக்கல் செய்யும்போதுதான் தெரியவந்தது. 4 ம் அயிட்ட சொத்து சென்னியப்பகவுண்டரின் தனிப்பட்ட சொத்து என்று தற்போதுதான் எனக்கு தெரியவருகிறது என்றால் சரிதான். 5 ம் அயிட்ட சொத்து நித்யாதேவி என்ற 3 ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்று தெரியவருகிறது என்றால் சென்னியப்பகவுண்டரின் குடும்ப சொத்திலிருந்து நித்யாதேவிக்கு எழுதி வைத்த சொத்து என்று தெரியவந்தது. மேற்படி சொத்து எந்த வருமானத்தின் அடிப்படையில் வாங்கப்பட்டது என்று வழக்குரையில் நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். எந்தெந்த சொத்துக்களிலிருந்து எவ்வளவு வருமானம் வந்தது என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 6 வது அயிட்ட சொத்தை என் தாயார் தாக்கல் செய்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் தெரியாது. என் தாயார் அ.வ.எண். 54/2007

வழக்கு தாக்கல் செய்த விபரங்கள் குறித்தான ஆவணங்களை நான் நீதிமன்றத்திலிருந்து பெறவில்லை என்றால் சரிதான். என்னுடைய தாயார் இந்தியன் வங்கி, கோபி கிளையில் கணக்கு வைத்திருந்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. என் தாயார் எனக்கு எதிராகவோ என் குடும்பத்திற்கு எதிராகவோ எப்போதாவது நடந்திருக்கிறாரா என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது நடந்துகொண்டார். 7ம் அயிட்ட சொத்தின் பெயர், அதில் கிணறு உள்ளதா, கூட்டு உரிமையாளர்கள் யார் என்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 9ம் அயிட்ட சொத்து பள்ளத்துவயல். மேற்படி சொத்தை என் தாயார் தாக்கல் செய்த வழக்கில் முதல் அயிட்டமாக சேர்த்துள்ளார் என்றால் ஆமாம். 10 முதல் 15 அயிட்ட சொத்துக்கள் அனைத்தும் என் தாத்தா சென்னியப்பகவுண்டருக்கு தனிப்பட்ட சொத்து என்பதால் தான் என் தாயார் தாக்கல் செய்த வழக்கில் அவற்றை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 16வது அயிட்ட சொத்து அக்ரஹாரகரை என்ற இடத்தல் உள்ளது அதை 2ம் பிரதிவாதியான என் அத்தையின் பெயரில் உள்ள தனிப்பட்ட சொத்து என்றால் தற்போது தான் அது பற்றி எனக்கு தெரியவந்தது. 17வது அயிட்ட சொத்து தொட்டிமேடு என்ற இடத்தில் உள்ளது அதை என் தாயார் தாக்க்ல செய்த வழக்கில் 1வதாக அயிட்டமாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் தற்போதுதான் தெரிந்துகொண்டேன். 18வது அயிட்ட சொத்து என் தாத்தாவுக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்து அதனால் பழைய வழக்கில் என் தாயார் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. கடைசி அயிட்ட சொத்து வீடு அது யாருடைய பெயரில் உள்ளது யார் யாரால் அனுபவிக்கப்பட்டு வருகிறது என்ற விபரம் தெரிந்துகொண்டேனா என்றால் தெரியாது. மொத்தம் 27 அயிட்ட சொத்துக்களில் எந்தெந்த சொத்துக்களில் கிணறு மோட்டார் பம்பு செட், மின் இணைப்புடன் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சொத்துக்களை பொறுத்து யார் யார் பெயரில் மின் இணைப்புகள் உள்ளது என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. இதுநாள் வரை 27 அயிட்ட சொத்துக்களுக்கும் உண்டான ஆவணங்களை தாக்க்ல செய்யாதததற்கு என்ன காரணம் என்றால் 2ம் பிரதிவாதி கையில் அனைத்து

ஆவணங்களும் உள்ளது அவர் தாக்கல் செய்வார் என்று உள்ளேன். என்னென்ன ஆவணங்கள் சொத்தை பொறுத்து உள்ளது என்பதை தெரிந்துகொள்ளாமல் தவறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வருவாய்துறை அலுவலர்கள் மூலமாக தாவா சொத்துக்களின் எல்லைகளை கண்டறிய நான் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் என்ன எதிர்வாதம் தாக்ல செய்துள்ளார் என்று படித்து பார்த்தேனா என்றால் ஆமாம். என்னுடைய பெரியப்பா பழனிச்சாமி உயிருடன் இல்லை என்றால் சரிதான் அவர் சொத்தை பொறுத்து என்ன ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளார் என்று தெரியுமா என்றால் என் அத்தைக்கு உயில் எழுதி வைத்ததாக சொல்லப்பட்டுள்ளது. இந்த வழக்கானது என் தாயாரின் தூண்டுதலின்பேரில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தாயாரின் உறவினர் நடராஜன் என்பவர் எனது படிப்புக்களுக்குண்டான செலவுகளை மேற்கொண்டார் என்றும், திருமணம் செய்து வைத்தார் என்றும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முழுவயதடைந்து 3 வருடத்திற்குள் ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட வழக்கினை பொறுத்து வழக்கு தாக்கல் செய்யாததால் தற்போது தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. என் தாயார் எனக்காக எனது திருமணம் மற்றும் படிப்பிற்காக பெற்ற பணம் தெரிந்துவிடும் என்பதால் தான் என் தரப்பில் முக்கியமான ஆவணங்களை தாக்கல் செய்யாமல் தவிர்த்துவிட்டேன் என்றால் சரியல்ல. ஆவணங்களின் விபரங்கள் , ஆவணங்கள் , சர்வே எண் பொறுத்தான விபரங்கள் உரிய முறையில் தாக்ல செய்யாமல் தாக்ல செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல , தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. என் அத்தை மற்றும் இருவர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் என் தாயார் சமரசமாக செய்துகொண்ட வழக்கின் விபரங்களை சொல்லியுள்ளார்கள் அதை தெரிந்த பிறகு அந்த வழக்கின் ஆவணங்களை நான் பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாத்தா சென்னியப்பகவுண்டருடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் தெரியாது. என் சின்ன தாத்தா, பெரிய தாத்தா ஆகியோர்களின் குடும்ப விபரங்கள் எனக்கு தெரியாதா

என்றால் எனது சிறுவயதிலேயே என் தகப்பனார் காலமாகிவிட்டதால் என் தகப்பனாரின் குடும்பத்தார் என்னை பராமரிக்கவில்லை எனவே அவர்களைப் பற்றி எனக்கு தெரியவில்லை. என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அவரது சகோதரர்கள் குடும்பத்தாருடன் தற்போதும் கூட்டாக அனுபவிக்கப்பட்டு வருகிறது எனவே அவர்களையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் இதுநாள்வரை தாவா சொத்துக்கள் எதிலும் கூட்டுப்பங்குதாரராக இருந்து அனுபவிக்கவில்லை என்பதால் இந்த வழக்கு கூட்டுப்பங்குதாராக இருந்து அனுபவித்து வருவதாக வழக்கு தாக்கல் செய்துள்ளே என்றும், இந்த வழக்கில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணமும் தவறானது என்றால் சரியல்ல. என் அத்தை மற்றும் அவரது மக்கள் பெயரிலுள்ள சொத்துக்களானது அவர்களது பெயரில் இருந்தாலும் அவை கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்று நான் விளம்புகை பரிகாரம் கேட்காமல் வெறுமனே பாகப்பிரிவினைக்காக தாக்கல செய்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தமிழ்நாடு அரசுக்காக மாவட்ட ஆட்சியர், வருவாய் வட்டாட்சியர், கோட்டாட்சியர் ஆகியோர்களை இந்த வழக்கில் சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு பாகப்பிரிவினைக்காக தனிப்பட்ட தரப்பினர்களுக்கிடையே தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த நீதிமன்றம் அரசு அவசிய தரப்பினர்கள் அல்ல என்று முடிவு செய்கிறது.

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**